

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
குருவே துணை
ஜென்னும்
வேதாத்திரியமும்...
பாகம்- 3
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# ஜென்னும் வேதாத்திரியமும்.

## பாகம் 3

### அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே


1. ஞானத்தை தேடி
2. உளமார்ந்த மன்னிப்பு
3. செயலுக்கு விளைவு உண்டு?
4. பிறந்தவர்கள் அனைவருமே இறப்பார்
5. எதற்கும் கவலை வேண்டாம்
6. ஞானத்தின் நிலைகள்
7. எண்ணத்தின் சிறப்பு
8. முழு விழிப்புணர்ச்சி!
9. நீ நான் இல்லையே!
10. மனம் ஒரு பொக்கிஷம்
11. உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு
12. நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
13. மௌனம் எனும் ஞானவரம்பு
14. கருதவமே போதும்
15. சொர்க்கமா? நரகமா?
16. சித்தம் என்னும் பெருநிதி
17. மனப்பதிவே இயக்கம்
18. பழக்கமே பற்றாக!
19. ஞானமும் வாழைப்பழமும்
20. எந்த எண்ணமும் நம்மை தூக்கிப் போகாது?
21. மனத்திண்மை வேண்டும்
22. மனித மனம் நிறைவு பெற

23. புலன் கடந்த செயல் முடிவே
24. கடவுள் எங்கே? என்று பலர் தேடுகின்றார்.
25. எண்ணத்தின் வலிமை
26. மனத்தூய்மை வேண்டும்
27. ஒவ்வொரு நிமிடமும் இன்பம்
28. அத்துவித ஆசனத்தில் அமர வாரீர்
29. மனஒருமைப்பாடு வேண்டும்?
30. ஆசையும் கவலையும்
31. அன்பு செய்
32. ஆர்வமும் முயற்சியும்
33. அலைதான் மனம்
34. மன்னிக்க தெரிந்த உள்ளம் மாணிக்க கோயில்
35. கடவுள் இரகசியம்
36. ஒவ்வொரு நாளும் இன்பம்

# 1. ஞானத்தை தேடி

(ஜென்னும் வேதாத்திரியமும்)

அரசன் ஒருவனுக்கு ஞானம் பெற வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

அவன் உடனடியாக குருமார்களைத் தேடி அலையத் தொடங்கினான்.

அதில் அவனுக்கு மனநிறைவு ஏற்படவில்லை.

ஒரு நாள் தனது குதிரையில் மனம் போன போக்கில் சுற்றத் தொடங்கினான். ஒரு மலைக் குகையில் ஜென் குரு ஒருவரைச் சந்தித்தான்.

குருவை வணங்கிய மன்னன், அவர் முன்பாக அமர்ந்தான். ஆனால் குருவோ கண் மூடி தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

அவர் கண் விழிப்பார் என்று காத்திருந்த மன்னனுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. பல மணி நேரம் கடந்தும், ஞானி கண் திறக்கவில்லை.

இறுதியாக தானே பேசி விடுவது என்று முடிவு செய்து, ‘சுவாமி! நான் ஞானத்தை அடைய வேண்டும். புத்தர் போல் ஆக வேண்டும்’ என்று தனது கோரிக்கையை முன் வைத்தான்.

குரு கண் விழித்தார்.

அரசன் ஏறி வந்த குதிரையை உற்றுப் பார்த்தார். பிறகு, ‘குதிரையைத் தேடாமல், எதற்காக ஞானத்தைத் தேடி வந்தாய்?’ என்று கேட்டார்.

மன்னனுக்கு குழப்பம், ‘சுவாமி! என்னிடம் குதிரை இருக்கிறது? அதோ பாருங்கள்’ என்று குதிரையைச் சுட்டிக்காட்டினான்.

குரு லேசாக புன்னகைத்தபடி, ‘நீ ஏன் குதிரையைத் தேடிப் பிடிக்கக் கூடாது?’ என்றார்.



மன்னனுக்கு கடுமையான கோபம் வந்தது. ‘என்ன சுவாமி! விளையாடுகிறீர்களா?

என்னிடம் தான் குதிரை இருக்கிறதே! அதில்தானே ஏறி வந்தேன். பிறகு எதற்காக நான் மறுபடியும் குதிரையை தேட வேண்டும்’ என்றான்.

சிறிது நேரம் சிரித்தபடியே இருந்தவர், பிறகு எழுந்து குகைக்குள் சென்று விட்டார்.

ஞானியின் உபதேசம் முடிந்து விட்டது.

அதாவது தன்னிடம் இருக்கும் குதிரையை எப்படி, மன்னனால் தேட முடியாதோ, அதே போல்தான் ஒவ்வொரு மனிதனுமே புத்தனாக,

ஞானம் உடையவனாக இருக்கும்போது, வெளியில் போய் ஞானத்தையும் தேட முடியாது. அவனுக்குள்தான் தேடிக்கொள்ள வேண்டும்.

ஞானம் தேடும் பக்தர்கள் -

"தேடுகின்ற பொருள் என்ன? ஏன்? நமக்குத்
தெரிந்தவர் யார்? கிடைக்குமிடம்எது? ஈதெல்லாம்
நாடுகின்ற வழக்கம் சிலபேரே கொள்வார்.
ஞானமதைத் தேடும்சிலர், இதை மறந்து
ஓடுகின்றார். உருக்கமுடன் தேடுகின்றார்.
ஒடுங்கிநின்று அறியும்அதை விரிந்து காணார்!
வாடுகின்றார்.. உளம்நொந்து, இருளைத்தேட
விளக்கெடுத்துப் போவதைப்போல, முரண்பா டன்றோ?"
(ஞாக.பா.1438)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 2. உளமார்ந்த மன்னிப்பு

(ஜென்னும் வேதாத்திரியமும்)

பான்கெய் என்ற ஜென் மாஸ்டர். தன்னுடைய சீடர்களுக்குப் போதனை செய்து கொண்டிருந்தார்.

அப்போது அங்கே ஒரு பூசாரி வந்தார். உள்ளூர் கோவிலில் வழிபாடு நடத்துகிறவர் அவர். புத்தர் மீதோ ஜென் மீதோ அவருக்கு நம்பிக்கை இல்லை.

ஆகவே, அவர் புத்தரை இழிவுபடுத்திப் பேசினார். 'ஜென் என்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம்' என்றார்.

பான்கெய் அவரைக் கண்டிக்கவோ மறுக்கவோ இல்லை. ‘ஐயா, உங்களுக்கு என்ன பிரச்னை?’ என்றார் அமைதியாக.




‘எங்களுடைய சாமி என்னென்ன அதிசயங்கள் செய்திருக்கிறது, தெரியுமா?’

‘தெரியவில்லை, சொல்லுங்கள்!’

‘அவர் நீர்மேல் நடப்பார், தீயை அள்ளி விழுங்குவார், அவர் ஒரு சொடக்குப் போட்டால் தங்கம் கொட்டும், நடனம் ஆடினால் பூமியே நடுங்கும்!’ என்றார் பூசாரி.

‘இதுபோல் எந்த அதிசயமும் செய்யாத உங்கள் புத்தரையோ மற்ற ஜென் துறவிகளையோ கடவுள் என்று எப்படி என்னால் ஏற்றுக் கொள்ள முடியும்?’

‘நீங்கள் நினைப்பது சரிதான் ஐயா’ என்றார் பான்கெய். ‘ஆனால், எங்களால் வேறொரு பெரிய அதிசயத்தைச் செய்யமுடியும்.’
‘அதென்ன?’

அமைதியாகச் சொன்னார் பான்கெய். ‘யாராவது தப்புச் செய்தால், எங்களுக்குத் துரோகம் இழைத்தால், அவமானப்படுத்தினால், அவர்கள்மீது எந்த வன்மமும் மனத்தில் வைத்துக்கொள்ளாமல் முழுமையாக மன்னித்துவிடுவோம்!’

“விருப்பம் சினம் வஞ்சம்மதம் பால்கவர்ச்சி
விளைவறியா கடும்பற்று என்ற ஆறும்,
உருக் குலைந்து நிறைந்த மனம். சகிப்புத்தன்மை,
உளமார்ந்த மன்னிப்பு, மெய் உணர்வு,
கருத்துடைய கற்பு நெறி, ஈகைஎன்ற

களங்கமிலா நற்குணங்க ளாக மாற்றும்.”  (ஞாக.பா.1592)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 3. செயலுக்கு விளைவு உண்டு?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவியின் சீடருக்கு வயதாகி விட்டது. விவசாயிக்கு சிறிது நிலம் இருந்தது. வயதான காரணத்தினால் அவரால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை.

வீட்டில் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார். அந்த விவசாயிக்கு ஒரு மகன் இருந்தான். அவன் நிலத்தில் வேலை செய்து விட்டு வந்து தனது தந்தையை பார்த்தான்.

தந்தை ஒரே இடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார். இதனைப் பார்த்த மகன் இனி தந்தை நமக்கு பயன்பட மாட்டார் என்று எண்ணி சவப்பெட்டி ஒன்றை செய்து வீட்டிற்கு எடுத்து வந்தான்.

அதைக் காட்டி தனது தந்தையிடம் சவப்பெட்டிக்குள் சென்று படுத்துக் கொள் என்று கூறினான்.



அதிர்ச்சியடைந்த தந்தையோ ஒன்றும் கூறாமல் உள்ளே ஏறி படுத்துக் கொண்டார்.

என்னை கொண்டுபோய் எறிந்து விடப்போகிறாய் என்று தெரியும்.

அதற்கு முன்னதாக உனக்கு ஒன்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன் என்று வயதான தந்தை தனது மகனைப் பார்த்து கேட்டார்.

உடனே மகன் வெறுப்புடன், “என்ன கூற வேண்டும்?” என்று கேட்டான்.

“என்னோடு சேர்த்து இந்த சவப்பெட்டியையும் எறிந்து விடாதே. இதை பத்திரமாக வைத்துக் கொள். ஏனெனில் உனது மகனுக்கு இது உதவியாக இருக்கும்” என்று கூறினார் அந்த வயதான தகப்பனார்.

“செயலிலே விளைவாக சிவத்தின் செய்கை
சிறந்து விளங்கும் உண்மை தேர்ந்து கொண்டால்,
செயல்களெல்லாம் நலம் விளைக்கும் வாறே செய்வோம்.
சிவனை நேராயறியும் சிறப்பு ஈதே.” (மாக்கோலம்.பக.139)

“செயலுக்கேற்ற விளைவு” எனும் தத்துவத்தை இறைநீதி என்றுதான் கருத்தில் கொள்ள வேண்டும்.

இறையாற்றல்தான் எந்த இடத்திலும் எந்த உருவத்திலும் அததற்கேற்ற இயக்கச் சீர்மையோடு செயலாற்றி வருகிறது.

ஆராய்ந்து தெளியுமிடத்து எல்லையற்ற அருட்பேராற்றலான இறையாற்றலேதான் தனது பரிணாமச் சிறப்பில் மன ஆற்றலாகவும் செயல்புரிகின்றது.

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 4. பிறந்தவர்கள் அனைவருமே இறப்பார்
(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் ஒரு ஜென் துறவி இருந்தார். அவரிடம் சீடனாக ஒரு குறும்புக்கார பையன் இக்யூ சேர்ந்தான்.

அவன் மிகவும் புத்திசாலி. ஒரு நாள் அந்த சிறுவன் இக்யூ, துறவிக்குப் பிடித்த ஒரு கோப்பையை எடுத்து பார்த்தான்.

அப்போது எதிர்பாராத விதமாக கோப்பையானது உடைந்து விட்டது. சொல்லப் போனால், அந்த கோப்பையானது மிகவும் விலை மதிப்பற்றது. அந்த கோப்பை துறவிக்கு மிகவும் விருப்பமானது.

அப்போது துறவி வரும் சத்தம் கேட்டது. உடனே அந்த சிறுவன் இக்யூ, கையில் இருந்த உடைந்த கோப்பையை பின்னால் மறைத்து வைத்தான்.

பின் அவன் துறவியிடம், "ஏன் மக்கள் அனைவருக்கும் இறப்பு ஏற்படுகிறது?" என்று கேட்டான்.

அதற்கு துறவி, "அது இயற்கையான ஒன்று. உலகில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் இறப்பு என்பது உண்டு." என்று சொன்னார்.

அப்போது உடனே அந்த சிறுவன் அந்த உடைந்த கோப்பையை நீட்டி "உங்கள் கோப்பைக்கும் இறப்பு வந்துவிட்டது" என்று கூறினான்.

பிறந்தவர்கள் அனைவருமே
    பின் இறந்தார் இறப்பார்
பிளவில்லாக் கருத்து இது
    பேருலகில் எல்லார்க்கும்....." (மாக்கோலம். பக்.73)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 5. எதற்கும் கவலை வேண்டாம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் பல ஆண்டுகளாக வயல்களில் ஒரு வயது முதிர்ந்த விவசாயி வேலை செய்து கொண்டிருந்தார்.

அவர் தனது வீட்டில் ஒரு குதிரையை வளர்த்து வந்தார். ஒரு நாள் அந்த குதிரை எங்கேயோ ஓடி போய்விட்டது.



அந்த விஷயத்தை அறிந்த அக்கம் பக்கத்தினர் அவரிடம் சென்று, "என்ன ஒரு கெட்ட அதிர்ஷ்டம்!" என்று கனிவோடு பேசினர். அதற்கு அந்த விவசாயி "இருக்கலாம்" என்று சொன்னார்.

மறுநாள் காலையில் ஓடிப் போன அந்த குதிரை திரும்ப வந்துவிட்டது.

ஆனால் வரும் போது மூன்று குதிரைகளோடு வந்தது. அதை அறிந்தவர்கள், அவரிடம் "எவ்வளவு அற்புதம்" என்று ஆச்சரியத்தோடு வந்து பேசினர். அதற்கும் அவர் "இருக்கலாம்" என்று கூறினார்.

அடுத்த நாள் அந்த விவசாயி மகன் அந்த குதிரையின் மீது சவாரி செய்ய ஆசைப்பட்டு, குதிரையின் மீது ஏறினான்.

ஆனால் அந்த குதிரையோ அவனை கீழே தள்ளிவிட்டது. அதனால் அவனது கால் உடைந்து விட்டது.

உடனே பக்கத்து வீட்டுக்காரர்கள், அவரிடம் மறுபடியும் கனிவோடு பேசினர். அதற்கும் அவர் "இருக்கலாம்" என்று சொன்னார்.

மறுநாள் இராணுவ அதிகாரிகள் அந்த கிராமத்திற்கு இளைஞர்களை அழைத்து செல்ல வந்தனர்.

அப்போது கால் உடைந்த அந்த இளைஞனை பார்த்து, சென்று விட்டனர்.

உடனே அக்கம் பக்கத்தினர் அந்த அவரிடம் வந்து “என்ன பாக்கியம் செய்தீர்களோ உங்கள் மகனை விட்டு சென்றுவிட்டனர்” என்று கூறி வாழ்த்துக்களை தெரிவித்தனர். அதற்கும் அந்த விவசாயி “இருக்கலாம்” என்றே கூறினார்.

ஆகவே “எது வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நடக்கும். எனவே எதற்கும் கவலை கொள்ளாமல் எல்லாம் நன்மைக்கே என்று ஏற்று கொள்ள வேண்டும்” என்பது நன்கு இக்கதையின் மூலம் புரிகிறது.

கவலை ஒழித்தல் – வேதாத்திரியம்


“அறிவாற்றல் கவலையினால் வீணாய்ப் போகும்.
அதையடுத்து உடல் நலமும் குன்றிப் போகும்.
அறிவினையே முயற்சி சிந்தனையால் மாற்றி,
அதற்கேற்பச் செயலாற்ற நலம் விளைக்கும்.” (ஞாக.பா.1572)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6. ஞானத்தின் நிலைகள்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு இளம் துறவி ஞானத்தில் முதிர்ந்துவிட்டதாக குரு அறிவித்தார். இதைக் கேட்ட துறவிகளில் சிலர் அந்த இளம் துறவியைப் பார்க்க விரும்பினர்.



அவரை சந்தித்து நீங்கள் சிறந்த ஞானம் அடைந்துவிட்டீர்கள் என்று கேள்விப்பட்டோமே, அது உண்மையா என்று கேட்டனர்.

ஆமாம் என்று அவர் கூற, தற்போது எப்படி உணர்கிறீர்கள் என்று பதிலுக்கு அவர்கள் கேட்டனர்.

எப்பொழுதும் போல் கஷ்டமாகத் தான் உணர்கிறேன் என்றார்.

ஞானத்தின் நிலைகள் – வேதாத்திரியம்

"அஞ்ஞானம் அறிவினது ஆரம்ப நிலையாகும்.
விஞ்ஞானமோ அறிவின் வேகநிலை
மெய்ஞ்ஞானம் அறிவதனின் பூரணமாம்.
இஞ்ஞானம் மூன்றும் இயற்கையின் எண்ணநிலை." (ஞாக.பா.1043)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 7. எண்ணத்தின் சிறப்பு

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் ஹோகென் எனும் ஜென் மாஸ்டர் கோவிலில் வசித்து வந்தார்.

அப்போது அந்த வழியாக வந்த நான்கு துறவிகள் ஹோகெனிடம், ஒரு நாள் இரவு தங்குவதற்கு அனுமதி கேட்டனர். அவரும் அனுமதி வழங்கினார்.

அன்று இரவு கடும் குளிராக இருந்தது. எனவே, கோயிலுக்கு வெளியில் தீயை மூட்டி குளிர் காய்ந்து கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென அவர்களுக்குள் ஒரு விவாதம் ஏற்பட்டது. அது "அக உண்மை பெரிதா?, புற உண்மை பெரிதா?" என்பதுதான்.

இதனிடையே, துறவிகள் வெகு நேரமாகியும் வராததால், ஹொகென் மாஸ்டர் அவர்களை தேடி வெளியில் வந்தார்.

அப்போது அவர்களுக்குள் நடந்த வாக்குவாதத்தை பார்த்து அருகில் வந்தார். துறவிகள் நால்வரும் "அக உண்மை மற்றும் புற உண்மை" பற்றி விவாதித்து கொண்டிருந்ததை கண்டார்.

அப்போது அவர் "அங்கே ஒரு பெரிய கல் இருக்கிறது. அதன் உண்மையான நிலை பற்றியது, உங்கள் புத்தியின் உள்ளே இருக்கிறதா அல்லது வெளியே இருக்கிறதா?" என்று கேட்டார்.

அந்த நால்வரில் ஒருவர் "அந்த கல்லின் உண்மை என் புத்தியின் உள்ளே இருக்கிறது ஏனெனில் புத்தமதத்தின் படி ஒவ்வொரு பொருளும், ஒருவரின் மனதின் உள்ளே பொருளாக்கப்படுகிறது," என்றார்.

அதற்கு ஹோகென் "அப்படியென்றால் அந்த கல்லின் பாரத்தை உன் புத்தி உணர வேண்டுமே!" என்றார்.

ஆகவே "எந்த ஒரு பொருளைப் பற்றி சொன்னாலும் அதைப் பற்றி, அதன் தன்மைகளைப் பற்றி நம் மனதில் பதிந்து ஒரு எண்ணம் இருக்கும்.

எனவே, புற உண்மையை அக உண்மை அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பது புத்தமதத்தின் கருத்தாக இருக்கிறது.

## எண்ணத்தின் சிறப்பு – வேதாத்திரியம்

"எண்ணம் சொல், செயல்களெல்லாம் ஒன்றுக் கொன்று

இணைந்துள்ள தன்மையதைக் காணும் போது,
எண்ணமே அனைத்துக்கும் மூல மாகும்.
இன்பதுன்பம் விருப்பு வெறுப்பு உயர்வு தாழ்வு
எண்ணத்தின் நாடகமே. பிரபஞ்சத்தின்
இரகசியங்கள் அனைத்துக்கும் ஈதே பெட்டி.
எண்ணமே இல்லையெனில், ஏதுமில்லை.
எண்ணத்துக் கப்பாலும் ஒன்றுமில்லை." (ஞாக.பா.1531)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 8. முழு விழிப்புணர்ச்சி!

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

பத்து வருடகாலக் கடினப் பயிற்சிக்குப் பின்னர் டெனோ ஒரு ஜென் குருவாக ஆனார்.

புகழ்பெற்ற மாஸ்டரான நான்–இன்–ஐப் பார்க்க அவர் சென்றார். நான் இன், சீடரான டெனோவை வரவேற்றார்.

பிறகு கேட்டார்: "டெனோ! உன்னுடைய கட்டை மிதியடியையும் குடையையும் மடாலய வாசலில் விட்டு வந்தாயா?"

"ஆமாம்! குருவே" என்றார் டெனோ.

"டெனோ! உனது குடையை மிதியடியின் இடது பக்கம் வைத்தாயா அல்லது வலது பக்கம் வைத்தாயா? சொல்லேன்!" என்று கேட்டார் மாஸ்டர்.

டெனோவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. தனக்கு இன்னும் முழுமையான விழிப்புணர்ச்சி வரவில்லை என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

ஆகவே, மீண்டும் பயிற்சிக்குத் தயாரானார்.

நான்–இன் கீழ் இன்னொரு பத்து ஆண்டுக் காலம் பயிற்சியை மேற்கொண்டார் டெனோ!

எண்ணம் சொல் செயலில் விழிப்புணர்வுடன் இரு -வேதாத்திரியம்.

“எண்ணு, சொல், செய் எல்லோர்க்கும் நன்மை தர,
எண்ணும்படி செய்! செய்யும்படி எண்ணு!” (ஞாக.பா.1541)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 9. நீ நான் இல்லையே!

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

சுவாங் ட்சு என்ற பெரிய ஜென் மாஸ்டருடன் அவரது நண்பர் ஒருவர் ஆற்றின் கரையோரமாகச் சென்று கொண்டிருந்தார்.



நண்பரை நோக்கிய சுவாங் ட்சு, “ஆற்றில் நீந்திக் கொண்டிருக்கும் மீன்களைப் பார்! அவை எவ்வளவு சந்தோஷமாக இருக்கின்றன பார்!” என்றார்.

“நீங்கள் மீன் இல்லையே! ஆகவே, அவை சந்தோஷமாக இருக்கின்றன என்பதை நிஜமாக நீங்கள் அறிய முடியாதே!” என்றார் நண்பர்.

சுவாங் ட்சு நண்பரை நோக்கிக் கூறினார்: “நீ நான் இல்லையே! ஆகவே, மீன்கள் சந்தோஷமாக இருக்கின்றன என்பதை நான் அறிந்திருக்கவில்லை என்பதை நீ எப்படி அறிவாய்?”

“நான்என்ற ஒரு சக்தி அறிவென்ற நிலையில்
நலம்தீது சுகதுக்கம் உணர்கின்ற தாக
ஊன்கொண்ட உருவமும் உள்ளச் சிறப்பும்
உடையதாகிப் பலராக வாழ்கின்றோம்....” (ஞாக.பா.1432)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 10. மனம் ஒரு பொக்கிஷம்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஓர் ஊரில் ஒருவன் நன்கு வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தான். அப்போது அந்த ஊரில் பொக்கிஷம் இருக்கும் இடத்தைப் பற்றிய வதந்தி பரவிக் கொண்டிருந்தது.

ஆகவே அந்த ஊரில் உள்ளவர்கள், பாலைவனத்தில் நின்று தூரத்தில் இருக்கும் மலையை பார்த்து நிற்கும் போது, நமது நிழல் விழும் இடத்தில் பொக்கிஷம் இருப்பதாக பேசிக் கொண்டனர்.

இதனைக் கேட்ட அவன், உடனே வியாபாரத்தை விட்டு, பொக்கிஷத்தை தேட பாலைவனத்திற்கு மறுநாள் காலையிலேயே சென்று, தூரத்தில் இருக்கும் மலையைப் பார்த்து நின்று, அவன் நிழல் விழம் இடத்தில் குழியைத் தோண்ட ஆரம்பித்தான்.

அதுவரை வியாபாரத்தின் மீது முழு கவனம் செலுத்திய அவன் பொக்கிஷத்தின் மீது கவனம் செலுத்த ஆரம்பித்தான்.

பொக்கிஷத்தைப் பெறுவதற்காக காலையில் இருந்து நிழல் விழுந்த இடத்தில் தோண்டிக் கொண்டிருந்தவனது நிழல், மாலையில் காலடிக்குள் வந்து விட்டது.

அதனால் ஏமாற்றமடைந்த அவன் அழுது புலம்பிக் கொண்டு இருந்தான்.

அப்போது அந்த வழியாக வந்த ஜென் துறவி ஒருவர், அவனது செயலைக் கண்டு சிரித்துக் கொண்டே அவனைப் பார்த்தார்.

பின் அவனிடம் “இப்போது தான் உன் நிழல் பொக்கிஷம் உள்ள இடத்தை சரியாக காட்டுகிறது. அதுவும் அந்த பொக்கிஷம் வேறு எங்கும் இல்லை, உன்னுள் தான் உள்ளது” என்று சொல்லிச் சென்றார்.

ஆகவே இருப்பதை வைத்து சந்தோஷமாக வாழ்வதை விட்டு, இல்லாத ஒன்றிற்கு ஆசைப்பட்டால். கடைசியில் இதுதான் நடக்கும்.

- மனம் ஒரு பொக்கிஷம் – வேதாத்திரியம்
- நம்முடைய மனமே நாம் பெற்றுள்ள ஒரு அரும்பெரும் பொக்கிஷமாகும். அதை எப்படி நாம் பயிற்றுவிக்கிறோமோ அப்படியெல்லாம் அது விரிந்தும் சுருங்கியும் சிறப்போடும் செயல்படும்.
- அணு அளவுக்கு சுருங்கவும் உலகளவுக்கு விரியவும் பேராற்றல் பெற்றது தான் நம் மனம்.
- அதை நாம் எந்தெந்த நிலையில் வைத்து அனுபவிக்கிறோமோ அந்தந்த நிலைக்கேற்ப அமைதியும் மகிழ்வும் கிட்டும் அவ்வளவு தான்.
- தவத்தால் இடம்தான் மாற்றம் அடைகிறதே ஒழிய செயல்படுவது ஒரே மனம் தான்.
- நம் மனம் பேராற்றல் களத்தோடு ஒன்றுபடும்போது பேராற்றலோடு கூடி பேரின்பம் பெறுகிறது.
- விரிந்து புறமனமாக புலன்வழி செல்லும் போது அதற்குண்டான இன்ப துன்ப அனுபவங்களை பெறுகிறது.

- இதுதான் இந்த மனதின் விசித்திரமாகும். எனவே தான் இதை WONDERLAND - விசித்திர லோகம் என்கிறோம்.

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 11. உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு (ஜென்னும் வேதாத்திரியமும்)

போதி மரத்தின் கீழ் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார் புத்தர்.

அங்கே வந்த ஒருவன் அவர் திருவடிகளை வணங்கினான்.

கண்விழித்த அவர் "நீ யார்? என்ன வேண்டும்?" என அன்புடன் கேட்டார்.

"பெருமானே! என் பெயர் அபிநந்தன். எனக்கு மனைவியும் ஒரு மகனும் உள்ளார்கள். குடும்ப வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்களை அனுபவித்து விட்டேன். பந்த பாசங்களில் இருந்து என்னை விடுவித்துத் துறவியாக்கி ஞானம் அருளுங்கள்" என்று வேண்டினான் அவன்.

"அபிநந்தா! இந்த மரத்தில் உள்ள இலைகள் காற்று மோதுவதால் ஆடுகின்றன. இந்த இலையைப் போன்றவை மனித மனங்கள். பந்த பாசம் என்ற காற்று மோதுவதால் மனம் அலை பாய்கிறது. பந்த பாசத்தை முழுமையாக உன்னால் துறந்துவிட முடியுமா?" என்று கேட்டார் புத்தர்.

"துறந்துவிட முடியும்" என்று உறுதியுடன் சொன்னான் அவன்.

"இந்த போதி வனத்திலேயே தங்கி இரு" என்றார் அவர்.

சில நாட்கள் சென்றன.

நீராடுவதற்காகக் குளத்திற்குச் சென்ற அவர் வழியில் அபிநந்தன் நாய் ஒன்றுடன் நிற்பதைப் பார்த்தார்.

“நாய் ஏது?” என்று விசாரித்தார்.

“பெருமானே! நான் வளர்த்த நாய் இது. என்னைப் பிரிந்து இருக்க முடியாமல் இங்கேயே வந்து விட்டது. இதை என்னுடன் வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று வேண்டினான்.




சிரித்தபடி அவர் அங்கிருந்து சென்றார்.

மேலும் சில நாட்கள் சென்றன.

வழக்கம் போல அவர் நீராடச் சென்றார்.

அபிநந்தன் நாயுடனும் சிறுவன் ஒருவனுடனும் இருந்தான்.

“இந்தச் சிறுவன் யார்?” என்று கேட்டார் அவர்.

“பெருமானே! இந்தப் பையன் என் மகன். இவனால் நாயைப் பிரிந்து இருக்க முடியவில்லை. இவனையும்” என்றான் அவன்.

சிரித்தபடியே சென்றார் அவர்.

மேலும; சில நாடகள் சென்றன. வழக்கம் போல நீராடச் சென்றார்.

அபிநந்தனுடன் நாயும் சிறுவனும் புதிதாக ஒரு பெண்ணும் இருப்பதைப் பார்த்தார்.

“யார் இந்தப் பெண்?” என்று கேட்டார்.

“பெருமானே! இவள் என் மனைவி. இவளால் மகனைப் பிரிந்து இருக்க முடியவில்லை. இவளையும்” என்றான் அவன்..

சிரித்த அவர் இரண்டு காலிப் பாத்திரங்களை எடுத்தார். ஒன்றில் கற்களை நிரப்பினார். மற்றொன்றில் எதையும் நிரப்பவில்லை. அது காலியாகவே இருந்தது.

முதல் பாத்திரத்தை அவர் குளத்து நீரில் விட்டார். அது தண்ணீருக்குள் முழுகிறது. இன்னொரு பாத்திரத்தைக் குளத்து நீரில் விட்டார். அது முழ்காமல் மிதந்தபடி இருந்தது.

“அபிநந்தா! கனமான பாத்திரம் தண்ணீருக்குள் மூழ்கி விட்டது. காலிப் பாத்திரம் முழ்காமல் மிதந்து செல்கிறது. பந்த பாசத்தால் பிணைக்கப்பட்டவர்கள் இங்கேயே கிடந்து துன்பப்பட வேண்டியதுதான். பந்த பாசங்களை விட்டவர்களே ஞானம் பெறுவார்கள்.

உன் மனம் உலகப் பற்றுகளில் உழலவே படைக்கப்பட்டு உள்ளது. உன்னால் அதில் இருந்து மீள முடியாது. உலகத் துன்பங்களை நீ அனுபவித்தே ஆக வேண்டும். நீ இங்கிருந்து செல்” என்றார் அவர்.

“உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு” என்பது வேதாத்திரியம்.

## உறவும் துறவும் – வேதாத்திரியம்

“உறவிலே அமைந்துள்ள உண்மையை உணர்ந்திடு..
துறவிலே உள உள்ளத் தூய்மை பெற்றுய்யலாம்.” (மாக்கோலம்135)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 12. நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் புகழ்பெற்ற துறவி ஒருவர் இருந்தார். அவரிடம் நிறைய மாணவர்கள் இருக்கின்றனர்.

ஒரு நாள் அவரைப் பார்க்க துறவியின் பழைய மாணவன் ஒருவன் பார்க்க வந்தான்.

அவரைப் பார்த்து எல்லாம் பேசிய பின்னர், குருவிடம் “எனக்கு ஒரு குழப்பம்” என்று சொன்னான்.

குருவும், “என்ன?” என்று கேட்டார்.

அதற்கு மாணவன், “நான் உங்களிடம் படித்த தியானத்தை சரியாக கடைபிடிக்கிறேன். அவை எனக்கு மனஅமைதியையும், அறிவுக் கூர்மையையும் தருகின்றன. அதை நன்கு என்னால் உணர முடிகிறது” என்று சொன்னான்.

“சந்தோஷம். இதில் என்ன குழப்பம்?” என்று குரு கேட்டார்.

அதற்கு மாணவன் “நான் தியானம் செய்யும் நேரங்களில் நல்லவனாக இருக்கிறேன். ஆனால் மற்ற நேரங்களில் நல்லவனாக இருக்கிறேனா? என்ற சந்தேகம் இருக்கிறது.

எனக்கே சில சமயங்களில் தவறுகளை செய்கிறேன் என்றும் தெரிகிறது. தியானம் செய்யும் ஒருவன் இப்படி செய்வது சரிதானா? இதை நினைக்கும் போது என் உள்ளம் கஷ்டமாக இருக்கிறது” என்று கூறினான்.

குரு அதற்கு சிரித்துவிட்டு, “ஆகவே நீ தியானமும் செய்கிறாய், தவறுகளும் செய்கிறாய், அப்படித்தானே...?” என்று கேட்டார். அதற்கு

அவனும் "ஆமாம், அது தவறில்லையா? என்று கேட்டான்.

குரு அதற்கு 'இல்லை. நீ தினமும் தியானம் செய், தினமும் தவறு செய், தினமும் தியானம் செய், தினமும் தவறு செய், கொஞ்ச நாளில் இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று நின்றுவிடும்!' என்று கூறினார்.

உடனே அந்த மாணவன் "ஒரு வேளை என் தியானம் நின்றுவிட்டால்?" என்று வினவினான். குரு "அதுவும் நல்லது தான். அப்போது தான் உன் உண்மையான இயல்பு உனக்கு புரியும்" என்று கூறினார்.

### உயிரில் மனம் அடங்க – வேதாத்திரியம்

"ஐந்து புலன்களையும் அடக்கி, புருவத்திடையே
அறிவினது மூலத்தை ஆழந்து நோக்கி அமர.
சிந்தை அடங்கிடும் சீவனே சிவனாகும்.
சிறுகச் சிறுகப் பயின்றால், சித்திக்கும் உண்மைநெறி."
(ஞாக.பா.1463)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 13. மௌனம் எனும் ஞானவரம்பு

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு மடாலயத்தில் பல ஜென் குருக்களும், பல சீடர்களும் வாழ்ந்து வந்தனர்.

அங்கே ஒரு வித்தியாசமான விதிமுறை நடைமுறையில் இருந் தது.

மௌனத்தைவிடச் சிறப்பாகப் பேச முடியுமென்றால் பேச வேண்டும என்பதே அது.

வகுப்பறையில் குரு மிகவும் அமைதியாக அமர்ந்திருந்தார்.



மாணவர்கள் அவரை அமைதியாகப் பார்த்தபடியே இருந்தனர். அவரும் அமைதியாக மாணவர்களைப் பார்த்தார். நேரம் ஓடிக் கொண்டே இருந்தது.

அப்போது வகுப்பறையின் அருகில் இருந்த மரத்திலிருந்த பறவை ஒன்று கூவிய சத்தம் கேட்டது.

"அவ்வளவுதான் இன்றைக்குப் பாடம் முடிந்தது" என்று சொல்லிய குரு எழுந்து வெளியில் சென்றார்.

"மனம் உலகை உயிரைக் கடந்தாதியான
மவுனநிலை நிற்பதொன்று. உணர்ந்து கொள்வோம்."
(ஞாக.பா.1179)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 14. கருதவமே போதும்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

புதிதாக தியானம் பழகிக் கொண்டிருந்த ஒருவர் ஜென் குருவைப் பார்ப்பதற்காக வந்தார்.

"எனக்கு ஒரு பிரச்சனை குருவே"

"என்ன பிரச்சனை"

“சிறிது நாட்களாக நான் தியானம் செய்து வருகிறேன். சில நேரங்களில் மனம் ஒரு நிலையில் இருப்பதில்லை. கண்டபடி அலைபாய்கிறது. குழப்ப நிலைக்கு வந்த பின்பு மீண்டும் தியானத்திற்குள் செல்வதற்கு மிகவும் கஷ்டப்படுகிறேன்”

“உன்னிடம் ரதம் இருக்கிறதா?”

“இருக்கிறது குருவே”

“அதை யார் ஓட்டுவது? நீயா. இல்லை வேலைக்கு ஆட்களை வைத்திருக்கிறாயாக?”

“சில நேரம் நான் ஓட்டுவேன். பெரும்பாலான நேரங்களில் என் சாரதிதான் ஓட்டுவார் குருவே”

“அவர் ஓட்டும்போது இப்படிச் செல், அப்படிச் செல், குதிரையை இப்படித் திருப்பு, அதன் கடிவாளத்தை இழுத்துப் பிடி என்று ஏதாவது கட்டளையிட்டபடியே செல்வாயா?”

“நாம் அவர்களை வேலைக்கு அமர்த்தியிருப்பதே ரதத்தில் நாம நிம்மதியாகச் செல்ல வேண்டும் என்பதற்காகத்தானே குருவே. அப்புறம் அவரை அவர் இஷ்டப்படி சுதந்திரமாக ஓட்ட விட்டால்தானே நாம் நிம்மதியாக இருக்க முடியும்”

“தியானமும் அப்படித்தான். இதைப் புரிந்து கொள். உன் பிரச்சனை தீர்ந்துவிடும்” என்று சொல்லிய குரு எழுந்து தன் வேலையைப் பார்க்கச் சென்றார்.

## கருதவமே போதும் - வேதாத்திரியம்.

“அகத்தவத்தால் மனச்சுழலைப் படிப்படியாய்க் குறைத்து,
 ஆதிநிலை ஒன்றுவரை பழக்கமாக்கிக் கொண்டால்,

இகத்துணர்வோ டெல்லையிலா இறைநிலையும் உணர,
ஏற்றபடி அவ்வப் போது பொருந்திவரக் காண்போம்.
மிகத்தெளிவும் உள்ளுணர்வும் முற்றறிவும் கிட்டும்.” (ஞாக.பா.1446)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 15. சொர்க்கமா? நரகமா?


(ஜென்னும் வேதாத்திரியமும்)

மிகவும் புகழ் பெற்ற ஜென் துறவி அவர்.

தினமும் அவரை நாடி வருபவர்களின் சந்தேகங்களைப் போக்கி அருள்புரிவார் அவர்.

ஒருநாள் அப்படி வந்த ஒருவன், “குருவே நீங்கள் இறந்த பின்பு என்ன ஆவீர்கள்? எங்கே போவீர்கள்?” என்று கேட்டான்.

உடனே சற்றும் தாமதிக்காமல், “நரகத்திற்குப் போவேன்” என்று பதில் அளித்தார் குரு.



அவரின் பதில் அவனை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

“குருவே தங்களைப் போன்ற நல்லவர்கள் சொர்க்கத்திற்குத் தானே போவார்கள். நீங்கள் மாற்றிக் கூறுகிறீர்களே?” என்று சந்தேகமாகக் கேட்டான்..

“உண்மைதான். ஆனால் எனக்கு அதில் சற்றும் விருப்பம் இல்லை.

சொர்க்கத்திற்குச் செல்லும் எல்லோருமே ஞானம் பெற்றவர்களாகத்தான் இருப்பார்கள். அங்கு எனக்கு வேலை இல்லை. நரகத்தில்தான் எனது வழிகாட்டுதல் பலருக்கும் தேவைப்படும்" என்றார் குரு.

**சொர்க்கம் நரகம் – வேதாத்திரியம்**

"உருவம் வரைக்கும் குறுகி நின்ற
உணர்ச்சி நிலையே நர-அகமாம்.
அரு மென்னும் பேரண்டம்
அறிந்த நிலையே சுவர்-அகமாம். பெருமையுள,
விண்என்ற அணுவறிந் தோன்
விண்ணவனாம்! ஆராய்ந்து
விண் கடந்து, வான் அறிந்த
விவேகியே வானவனாம்!"

(ஞாக.பா.1340)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 16. சித்தம் என்னும் பெருநிதி

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

சீனாவின் புகழ்பெற்ற ஜென் குரு அவர்.

அவரைத் தேடி தினமும் பலர் வந்து தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைப் போக்கிக் கொள்வது வழக்கம்.

அவரால் முடிந்தவரை அனைவருக்கும் வழிகாட்டுவார்.

ஒருநாள் இளைஞன் ஒருவன் அவரைப் பார்ப்பதற்காக வந்திருந்தான்.

"குருவே நான் ஞானம் பெற வேண்டும். அதற்கு நீங்கள்தான் வழிகாட்ட வேண்டும்"

“அதற்காகவா இவ்வளவு தூரம் வந்தாய், உன்குள்ளேயே இருக்கும் புதையலை ஏன் வெளியில் தேடுகிறாய்?”

“எனக்குள்ளேயே புதையலா? அதை நான் எப்படிக் கண்டு பிடிப்பது?”

இப்படிக் கேள்வி கேட்கிறாய் பார், அதுதான் உன்னுடைய புதையல். தொடர்ந்து கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இரு. புதையலை அடைவாய்” என்ற குரு புன்னகைத்தார்.

## சித்தம் என்னும் பெருநிதி – வேதாத்திரியம்

“சித்தம் எனும் பெருநிதியாம் சிறப் பறிந்தால் அவ்விடத்தே
சத்தம் ஒளி சுவை மணங்கள் தரம் தோற்றம் இவை காணும்!
நித்தியமும் அநித்தியமும் ஒன்றேன்ற அத்துவித,
தத்துவமும் தானாகித் தன்னிலை விளக்கம் உண்டாம்!”
(ஞாக.பா.1181)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 17. மனப்பதிவே இயக்கம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குரு ஒருவர் தன் சீடர்களுக்கு தன்னம்பிக்கை பாடத்தை சொல்லிக் கொடுத்தார்.

அந்த பாடத்தை தன் சீடர்களுக்கு புரியும் படியாக கதையின் வாயிலாக சொல்ல ஆரம்பித்தார்.

“வேடன் ஒருவனுக்கு யானை என்றால் மிகவும் பிடிக்கும். அதனால் அவன் காட்டில் குழிகள் பலவற்றை வெட்டி, அவற்றில் விழும் குட்டி யானைகளை பிடித்து, இரும்புச் சங்கிலியில் கட்டிவிடுவான்.

அந்த யானைகளோ அவனிடமிருந்து தப்பிக்க எவ்வளவோ முயற்சிக்கும். இருப்பினும் அவற்றால் முடியாத காரணத்தினால், நாளடைவில் நம்பிக்கையை இழிந்துவிடும்.

பின் அந்த யானைகள் பெரிதானவுடன், அதனை கயிற்றால் கட்டிவிடுவான்.

அப்போது ஒரு நாள் வேட்டைக்கு ராஜா அந்த காட்டிற்கு தன் மகனுடன் வந்தார்.

அப்போது பெரிய யானைகள் கயிற்றிலும், குட்டி யானைகள் இரும்புச் சங்கிலியிலும் கட்டியிருப்பதை பார்த்து, அந்த வேடனிடம் “எதற்கு குட்டி யானைகளை இரும்புச் சங்கிலியிலும், பெரிய யானைகளை கயிற்றிலும் கட்டியுள்ளாய். அவை கயிற்றை அறுத்துக் கொண்டு போய் விடுமல்லவா?” என்று கேட்டார்.

அதற்கு அந்த வேடன் “மன்னா! பெரிய யானைகள் குட்டியாக இருக்கும் போது இரும்புச் சங்கிலியால் தான் கட்டடப்பட்டிருந்தன. இது மனதில் பதிந்து விட்டது.

“மனம் பதிந்த பதிவுகளின் நினைவாய், ஆற்றும்
மதிஇயக்கம் நடுமனமாம்.........” (ஞாக.பா.1163)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 18. பழக்கமே பற்றாக!

(ஜென்னும் வேதாத்திரியமும்)

எகி புத்தர் கோயிலில், ஜென் குருவாக கிடானோ கெம்போ என்பவர் இருந்தார்.

தொண்ணூற்று இரண்டு வயது வரை வாழ்ந்தவர் அவர்.

வாழ்நாள் முழுவதும் எந்தப் பொருளிலும் அவர் பற்று வைத்தது இல்லை.

துறவியான அவர் இருபதாவது வயதில் இருந்து ஒவ்வொரு ஊராகத் திரிந்து கொண்டிருந்தார்.

அப்போது வழிப்போக்கர் ஒருவரைச் சந்தித்தார். அந்த வழிப்போக்கர் புகை பிடிக்கும் பழக்கம் உடையவர்.

இருவரும் மலைப் பாதை வழியாகச் சென்று கொண்ருந்தார்கள்.

களைப்பு அடைந்ததால் அவர்கள் இருவரும் அங்கிருந்த மரத்தின் நிழலில் அமர்ந்தார்கள்.

அந்த வழிப்போக்கர் “நீங்களும் புகைத்துப் பாருங்கள் என்றபடி புகை போக்கியை அவரிடம் தந்தார்.

பசியுடன் இருந்த கின்டோ அவர்கள் புகை போக்கியை வாங்கிப் புகை பிடித்தார்.

“ஆ! புகை பிடிப்பது எவ்வளவு இனிமையாக உள்ளது?” என்றபடியே புகை போக்கியைத் திரும்பித் தந்தார்.

இதைக் கேட்ட வழிப்போக்கர் புகை போக்கியை மீண்டும் அவரிடம் தந்தார். “இன்னும் சிறிது புகையுங்கள்” என்றார்.

“இப்படிப்பட்ட மகிழ்ச்சியான செயல் தியானத்திற்கு இடையூறாக இருக்கும். இந்தப் பழகத்திற்கு அடிமையாவதற்கு முன் பழக்கத்தைவிட வேண்டும்” என்று நினைத்தார்.

அவர் தந்த புகை போக்கியை வீசி எறிந்தார்.

## பந்தபாசம் அற்ற வாழ்வு – வேதாத்திரியம்.

“பழக்கமே பற்றாக! பாசமாக!
பரிணமித்துச் சிக்கல் வாழ்வியலாச்சு.
இழக்கின்றோம் இயற்கைவள இன்பமெல்லாம்.
இதையுணர்ந்து ஏற்றபடித் திருந்தி வாழ்வோம்.” (ஞாக.பா.623)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 19. ஞானமும் வாழைப்பழமும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குரு ஒருவரை இளைஞன் ஒருவன் வணங்கினான்.

“நான் எளிதில் ஞானம் பெற விரும்புகிறேன். அதற்கு ஏதேனும் வழி இருந்தால் சொல்லுங்கள்” என்று பணிவுடன் கேட்டான்.

“தியானம் செய். புத்தர் பெருமானை வழிபட்டுப் பூஜை செய். பிறகு வாழைப் பழம் சாப்பிடு” என்றார் அவர்.



“நாள்தோறும் எத்தனை வாழைப் பழங்கள் சாப்பிட வேண்டும்?” என்று கேட்டான் அவன்.

“நாள்தோறும் எவ்வளவு நேரம் தியானம் செய்ய வேண்டும்? எவ்வளவு நேரம் புத்தர் பெருமானை வழிபட வேண்டும் என்று கேட்டிருந்தால் உனக்கு ஞானத்தில் நாட்டம் உள்ளது என்பது தெரிந்து இருக்கும்.

நீயோ எத்தனை வாழைப் பழங்கள் சாப்பிடுவது என்று கேட்டாய்.

ஞானம் பெற உனக்கு ஆர்வம் இருப்பதாகத் தெரியவில்லை. வயிற்று வலி வரத்தான் வாய்ப்பு உள்ளது. ஞானம் பெற உனக்குத் தகுதி இல்லை. போய் வா" என்றார் அவர்.

### "ஞானம் தேடும் பக்தர்கள் – வேதாத்திரியம்

தேடுகின்ற பொருள் என்ன? ஏன்? நமக்கு
 தெரிந்தவர் யார்? கிடைக்குமிடம் எது? ஈதெல்லாம்
நாடுகின்ற வழக்கம் சிலபேரே கொள்வார்.
 ஞானமதைத் தேடும் சிலர் இதை மறந்து
ஓடுகின்றார் உருக்கமுடன் தேடுகின்றார்.
 ஒடுங்கி நின்று அறியும் இதை விரிந்து காணார்!
வாடுகின்றார், உளம்நொந்து, இருளைத்தேட
 விளக்கெடுத்துப் போவதைப் போல, முரண் பாடன்றோ?"
(ஞாக.பா.1438)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 20. எந்த எண்ணமும் நம்மை தூக்கிப் போகாது?
### (ஜென்னும் வேதாத்திரியமும்)

காட்டின் வழியே இரு ஜென் துறவிகள் நடந்து சென்றனர். அப்போது அந்த வழியில் ஆறு ஒன்று இருந்தது. அவர்கள் அந்த ஆற்றைக் கடந்து கரைக்குச் செல்ல நீரில் இறங்கினர்.

அந்த நேரம் ஒரு இளம் பெண் ஆற்றை கடக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

அவள் துறவியிடம் "என்னை மறுகரைக்கு கொண்டு சேர்க்க முடியுமா?" என்று கேட்டாள்.

ஆனால் அவர்களில் ஒரு துறவி மிகவும் தயங்கினார்.



மற்றவர் தயங்காமல், அந்த பெண்ணை தன் தோள் மீது தூக்கிச் சென்று, மறுகரையில் இறக்கினார். மறுகரை சேர்ந்ததும் அந்த பெண் ஜென் துறவிக்கு நன்றி சொல்லிவிட்டு சென்று விட்டாள்.

அவர்களும் தங்கள் பயணத்தை தொடங்கினர். சற்று நேரம் கழித்து, உதவி செய்ய தயங்கிய துறவி மற்றொருவரிடம் "நம் புத்த மதக் கொள்கையின் படி, துறவியான பின் எந்த பெண்ணையும் தொடக்கூடாது தானே?

ஆனால் நீங்கள் ஏன் அந்த பெண்ணை தொட்டு தூக்கி மறுகரையில் இறக்கினீர்? அது தவறல்லவா?" என்று கேட்டார்.

அதற்கு உதவி செய்த துறவி சொன்னார், "நான் அந்த பெண்ணை தூக்கி கரையிலேயே இறக்கிவிட்டேன். நீங்கள் தான் இன்னும் அதனை சுமக்கிறீர்கள்" என்று புன்னகையுடன் சொன்னார்.

## பொன்மொழிகள் – வேதாத்திரியம்

"கெட்டியான இறைநிலையோடு ஒட்டி இருக்கும்போது எந்த எண்ணமும் நம்மை தூக்கிப் போகாது" (வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 21. மனத்திண்மை வேண்டும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் வில் வித்தையில் சிறந்து விளங்கிய இளம் வீரன் ஒருவன் இருந்தான்.

அவன் புகழ் பெற்ற வில் வித்தையில் சிறந்த ஒரு ஜென் துறவியைப் பற்றி தெரிந்ததும், தன்னை விட இந்த உலகில் யாரும் வில் வித்தையில் சிறந்தவராக இருக்க முடியாது என்று அந்த துறவியிடம் சென்று தன்னுடன் போட்டியிட்டு ஜெயிக்க முடியுமா என்று சவால் விட்டான்.

அதற்கு அந்த துறவியும் ஒப்புக் கொண்டார். அப்போது அவர்களுக்கிடையே பல போட்டிகள் நடந்தன. இருவருமே வெற்றி பெற்று முன்னேறி வந்தனர்.

அந்த போட்டியில், தூரத்தில் இருக்கும் ஒரு பொம்மையின் கண்ணை ஒரு அம்பால் அடித்து, பின் மற்றொரு அம்பால் அந்த அம்பையே இரண்டாய் பிளந்து, சாதனை செய்து காட்டினான் இளம் வீரன்.

அதைப் பார்த்த அந்த துறவி 'அருமை' என்று சொன்னார்.

பின் அவர் அந்த இளம் வீரரை அழைத்து, “என்னுடன் ஒரு இடத்திற்கு வா, அங்கு வெற்றி பெற முடிகிறதா என்று பார்ப்போம்” என்று கூறினார். அந்த வீரனும் அவருடன் ஆவலோடு சென்றான்.

துறவியோ அவனை, பெரிய மலைச் சிகரத்திற்கு அழைத்துச் சென்றார்.

பின்பு அவனிடம், இரண்டு மலைகளுக்கு இடையே போடப்பட்டிருக்கும் சிறிய மரப்பாலத்தின் நடுவில் நின்று, தூரத்தில்

ஒரு மரத்தில் இருக்கும் கனியை அடிக்க வேண்டும் என்று சொன்னார்.

ஆனால் அந்த பாலமோ ஒருவர் மட்டும் செல்லக் கூடியதாய், பாலத்தின் கீழே பார்த்தால் பாதாளம். விழுந்தால் மரணம் என்பது போல் இருந்தது.

பின் அந்த துறவி பாலத்தின் நடுவே சென்று, தன் அம்பை எடுத்து, அந்த பழத்தை சரியாக அடித்தார்.

பின்பு இளம் வீரனிடம் “இப்போது உன் முறை” என்று சொல்லி மலைப்பகுதிக்கு சென்று விட்டார்.

அவனுக்கோ கை, கால்களெல்லாம் உதறியது. அதனால் அவனால் அந்த பழத்தை சரியாக அடிக்க முடியவில்லை.

அதைக்கண்ட துறவி வீரனை தடவிக் கொடுத்து, “உன் வில்லின் மேல் இருந்த உறுதி, உன் மனதில் இல்லை” என்று சொல்லிச் சென்றார்.

இதிலிருந்து “மற்றவற்றின் மீது வைக்கும் நம்பிக்கையை விட உன் மீது நம்பிக்கை வைத்தால், வெற்றியானது நிச்சயம் கிடைக்கும்” என்பது புரிகிறது.

## மனத்திண்மை வேண்டும் – வேதாத்திரியம்

“ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
உறுதி, நுட்பம், சக்தி இவை யதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
அறிவினிலே நிலைத்து விடும். ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் ஆற்றும்
நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்
இயற்கைமுறை சிறப்புடைத்து ஈதே தவமாம்.” (ஞாக.பா.1473)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 22. மனித மனம் நிறைவு பெற

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஓர் ஊரில் மாபெரும் ஒரு செல்வந்தன் வாழ்ந்து வந்தான். அவனிடம் அனைத்தும் இருக்கின்றன.

ஆனால் சந்தோஷம் மட்டும் இல்லை. அதற்காக அவன் அந்த சந்தோஷத்தைத் தேடிக் கொண்டு வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று பார்த்தான். ஆனால் அங்கும் அவனுக்கு கிடைக்கவில்லை.

மேலும் அவன் சந்தோஷத்திற்காக மது, மங்கையர், போதைப் பொருள் என்று எல்லாவற்றின் பின்னும் சென்றான். ஆனால் அதனாலும் அவன் மனமானது மகிழ்ச்சி அடையவில்லை.

இறுதியாக அவன் "துறவறத்தில் இறங்கினால் மகிழ்ச்சி கிடைக்கும்" என்று யாரோ ஒருவர் சொல்வதைக் கேட்டு, அதற்கும் முயற்சிக்க முடிவெடுத்தான்.

அதற்காக அவன் தன் வீட்டில் இருக்கும் தங்கம், வைரம், வைடூரியம் என்று அனைத்தையும் ஒரு மூட்டையாக கட்டி எடுத்துக் கொண்டு ஒரு ஜென் துறவியைப் பார்க்கச் சென்றான்.

அப்போது ஜென் துறவி ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த அந்த செல்வந்தன், அந்த மூட்டையை துறவியின் காலடியில் வைத்துவிட்டு, "குருவே! இதோ என் அனைத்து சொத்துக்களையும் ஒரு மூட்டையாக கட்டி வைத்திருக்கிறேன். இனி

இவை எதுவும் எனக்கு தேவையில்லை. எனக்கு அமைதியும், சந்தோஷமும் மட்டுமே வேண்டும்." என்று கூறி ஜென் துறவியிடம் சரணடைந்தான்.

அந்த துறவியோ செல்வந்தன் கூறிய அனைத்தையும் கேட்டுவிட்டு, அந்த மூட்டையை அவசரமாக பிரித்து பார்த்தார்.

அதில் கண்ணை பறிக்கும் வகையில் இருக்கும் தங்கம் மற்றும் வைரத்தை பார்த்ததும், அந்த மூட்டையை கட்டி தலையில் வைத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தார்.

அதைப் பார்த்த செல்வந்தனுக்குப் பெரும் அதிர்ச்சியாகி விட்டது. நாம் ஒரு போலி சாமியாரிடம் நம் செல்வத்தை கோட்டை விட்டு விட்டோமே! என்று கவலை அடைந்து. கோபத்தில் அந்த துறவியை துரத்த ஆரம்பித்தான்.

துறவியின் ஓட்டத்துக்கு செல்வந்தனால் ஈடு கொடுக்க முடியவில்லை.

துறவி சந்து பொந்துகளில் எல்லாம் ஓடி கடைசியில் அதே மரத்தடிக்கு வந்து நின்றார்.

பின் அந்த செல்வந்தனைப் பார்த்து "என்ன பயந்து விட்டாயா? இந்தா உன் செல்வம். நீயே வைத்துக் கொள்" என்று மூட்டையைக் கொடுத்தார்.

இதுவரை சந்தோஷம் இல்லை என்று நினைத்து கவலையில் இருந்த அந்த செல்வந்தன், கைவிட்டுப் போன தங்கமும், வைரமும் திரும்பி கிடைத்து விட்டது என்பதில் பெரும் சந்தோஷத்துடன் இருந்தான்.

அப்போது அந்த துறவி செல்வந்தனைப் பார்த்து, "இதற்கு முன் இந்த செல்வம் உன்னிடம் தான் இருந்தது. ஆனால் அப்போது உன்னிடம் சந்தோஷம் இல்லை!

இப்போது உன்னிடம் இருப்பதும் அதே செல்வம் தான். ஆனால் இப்போது உன் மனதில் சந்தோஷம் இருக்கிறது!” என்று கூறி சென்றுவிட்டார்.

“சந்தோஷம் என்பது நமக்கு வெளியே இல்லை. மனதில் தான் இருக்கிறது. ஆனால் அது பலருக்கும் தெரியவில்லை.

## மனிதமனம் நிறைவு பெற வேண்டும் – வேதாத்திரியம்.

“உடல்துன்பம், மனக்குழப்பம், அறிவு, உயராமை
உலகத்தில் மக்கள்தமை விலங்கினத்தே வைக்கும்.
கடல்வளத்தை, நிலவளத்தை. அறிவுஉடல் திறனால்
கருத்துடனே வாழ்வின்வளப் பொருட்களாக மாற்றிக்
குடல்பசிக்கும், மற்றும்உடல் தேவைக்கும் ஏற்பக்
குறைவின்றிப் பொருள்பெறவும், காப்புகல்வி பெறவும்,
இடல்மிகுந்து, ஏற்றல்குறைந் துலகவாழ்வு அமைந்தால்
எல்லாரும் அறிவறிந்து இனியவாழ்வு பெறலாம்.” (ஞாக.பா.306)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 23. புலன்கடந்த செயல்முடிவே

## (ஜென்னும் வேதாத்திரியமும்)


புகழ்பெற்ற ஜென் குருவான அவரிடம் பல இளைஞர்களும், இளம்பெண்களும் பாடம் கற்று வந்தனர்.

தினசரி அவரைப் பார்த்துப் பார்த்து அவரின்மேல் ஒரு பெண்ணிற்கு காதல் வந்துவிட்டது.

அது மிகவும் தவறு என்பது அவளுக்குப் புரிந்த போதும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் தவித்தாள்.

குரு தனிமையில் இருந்தபோது அவரிடம் சென்ற அவள் தன் காதலை வெளிப்படுத்தினாள்.

“இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்” என்று வேண்டிக் கொண்டாள்.



“கவலைப்பட வேண்டாம். நீ நினைப்பதில் தவறு ஏதும் இல்லை. நம் இருவருக்கும் தேவையான காதல் உன்னிடமே சுரந்து கொண்டிருக்கிறது” என்றார்.

“அப்படியானால் நீங்களும் என்னைக் காதலித்து திருமணம் செய்து கொள்வீர்களா?” ஆசையாகக் கேட்டாள்.

“அது முடியாது. நம் இருவருக்கும் தேவையான கட்டுப்பாடு என்னிடம் சுரந்து கொண்டிருக்கிறது” என்றார் குரு.

வேதாத்திரியம் சொல்லுகிறது.....

“புலனைந்தின் துணைகொண்டு. பூவுலக அனுபவித்து,
புலன்தொடர்பற்று ஆராயும், புதுமையே ஆறாம் அறிவாம்!
புலன்கடந்த செயல்முடிவே பூர்வநிலை அறிவறிதல்,
புலன்கடந்த அவ்விடத்தே, பொருந்தி வாழ்வான் ஞானி!” (ஞாக..பா.1143)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 24. கடவுள் எங்கே? என்று பலர் தேடுகின்றார்.
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் வாழும் மக்கள் அனைவரும் கடவுள் மற்றும் வெவ்வேறு மதங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது அது ஒரு பெரிய விவாதமாக மாறியது. அந்த விவாதம் “கடவுள் பார்க்க எப்படி இருப்பார்?” என் பதைப் பற்றியதாகும்.

அங்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிலைக் கூறினர். பின்னர் அதற்கு சரியான பதிலை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால், ஒரு புத்தரை பார்த்து அவரிடம் அதற்கான பதிலை கேட்கச் சென்றனர்.

அங்கு அவரிடம் “கடவுள் பார்க்க எப்படி இருப்பார்? அதற்கு சரியான பதிலை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை” என்று கூறினார்கள்.

அப்போது புத்தர் அவர்களது சீடர்களிடம் “நான்கு குருடர்கள் மற்றும் ஒரு பெரிய யானையை கொண்டு வாருங்கள்” என்று கூறினார்.

அந்த சீடர்களும் கொண்டு வந்தனர். பின் புத்தர் அந்த நான்கு குருடர்களிடம், “நான் ஒரு பொருளை தருகிறேன், அது என்னவென்று கூறுங்கள்” என்று கூறினார். அவர்களும் சரி என்று கூறினார்.

முதலில் அந்த குருடர்களுள் ஒருவன் யானையின் கால்களை தொட்டுப் பார்த்து, அது “தூண்” போல் இருக்கிறது என்று கூறினான்.



மற்றொருவன் அதன் வயிற்றைத் தொட்டுப் பார்த்து, அது "சுவர்" போல் இருக்கிறது என்று கூறினான்.

மூன்றாமவன் அந்த யானையின் காதுகளைத் தொட்டுப் பார்த்து, "துணி" போல் இருக்கிறது என்று சொன்னான். அடுத்தவன் அதன் வாலைத் தொட்டுப் பார்த்து, "கயிறு" போல் உள்ளது என்றான்.

பின்னர் புத்தர் மக்களிடம் "இந்த குருடர்கள் யானையை தொட்டுப் பார்த்து, அவர்கள் உணர்ந்ததை வெவ்வேறு மாதிரி கூறினார்கள்.

இவற்றில் எது சரி?" என்று கேட்டு, அதேப்போல் தான் கடவுளும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி என்று கூறி உள்ளே சென்று விட்டார்.

## கடவுள் எங்கே? – வேதாத்திரியம்

"கட-உள் என்று சொல்லி விட்டான் கருவறிந்தோன்,
கருத்தறியான் ஊன்றிஇதைக் காணவில்லை!
கட-உள் என்ற ஆக்கினையின் குறிப்பைமாற்றி,
கண்டறிந்த நிலைக்கே அப்பெயரைக் கொண்டான்
கட-உள் என்ற இருசொல்லை ஒன்றாய்க்கூட்டிக்
கடவுள் என்றே சொல்லிச் சொல்லி வழக்கமாச்சு!
கட-உள் என்று மனிதன் ஒரு குறிப்புத் தந்தான்.
கடவுள் எங்கே? என்று பலர் தேடுகின்றார்." (ஞாக.பா.1121)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 25. எண்ணத்தின் வலிமை

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் ஒருவர் யாத்திரை கிளம்பத் திட்டமிட்டார்.



அது கடுமையான பின்பனி காலம். குளிரும் அதிகமாக இருந்தது.

அதைக்கண்ட அவரின் சீடர்களின் ஒருவர் "பனி அதிகமாக உள்ளதே. இந்த நிலையில் நீங்கள் எப்படி குருவே தங்களின் பயணத்தைத் தொடங்குவீர்கள்?" என்று கேட்டார்.

என் மனம் முன்பே அங்கு போய் சேர்ந்து விட்டது. அது போன வழியில் நானும் பின் தொடர்ந்து சென்று விடுவேன்" என்று பதில் கூறினார் ஜென் குரு.

## எண்ணத்தின் வலிமையும் ஆற்றலும் – வேதாத்திரியம்.

"எண்ணியவெல்லாம் எண்ணியபடியே யாகும்.
எண்ணத்தில் உறுதியும் ஒழுங்கும் அமைந்திடில்." (ஞாக.பா.1640)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 26. மனத்தூய்மை வேண்டும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குருவின் ஆசிரமத்திற்கு ஒரு இளைஞன் வந்தான்.

குருவைப் பணிந்து வணங்கிய அவன் “குருவே நான் என் மனதால்கூட எந்தத் தவறும் செய்வதில்லை. பிறருக்கு என்னால் ஆன உதவிகளைச் செய்கிறேன். எந்த விதமான கெடுதலும் செய்ததில்லை. மனதைத் தூய்மையாக வைத்துள்ள எனக்கு உங்களுடைய உபதேசம் தேவையா?” என்று கேட்டான்.

அவன் கூறியதைக் கேட்ட குரு, “நீ எந்த ஒரு வேலையும் செய்யாமல் ஒரு இடத்தில் அமைதியாக இரண்டு நாட்கள் இருந்துவிட்டுப் பின்னர் என்னிடம் வா” என்று அவனை அனுப்பி வைத்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் திரும்பி வந்தான்.

“உன் ஆடைகளைப் பார், எவ்வளவு அழுக்காக இருக்கிறது. நீ எங்கும் செல்லாமல் ஓரிடத்தில் சும்மா உட்கார்ந்திருந்த போதே இவ்வளவு அழுக்கு சேர்ந்திருக்கிறது என்றால் அலைந்து திரியும் மனதில் எவ்வளவு அழுக்குச் சேரும். நல்ல எண்ணங்களை மனதில் நிரப்பிப் கொண்டே இருந்தால்தான் மனம் சுத்தமாகும். அதைத்தான் நான் என் உபதேசத்தின் மூலம் சொல்கிறேன்”

மனத்தூய்மை வினைத்தூய்மை வேண்டும் – வேதாத்திரியம்.

“மனத்தூய்மை, வினைத்தூய்மை மனிதன் வாழ்வில்
மகிழ்ச்சி, இனிமை, நிறைவு, அமைதி நல்கும்,” (ஞாக.பா.1173)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 27. ஒவ்வொரு நிமிடமும் இன்பம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குரு தன் மாணவர்களுக்கு சொன்ன கதைகளில் இதுவும் ஒன்று.

ஒருமுறை அவர் தன்னம்பிக்கை பற்றிய பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியே ஒரு ஏறும்பு உணவுப் பொருளைத் தூக்கியபடி சென்று கொண்டிருந்தது.

அதை மாணவர்களுக்குக் காட்டினார் குரு.

அனைத்து மாணவர்களும் எறும்பின் செயலையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

எறும்பு செல்லும் வழியில் ஒரு சிறிய விரிசல் இருந்தது. அதை எப்படித் தாண்டிச் செல்வது என்று சிறிது நேரம் நின்ற ஏறும்பு உடனே தான் கொண்டு வந்த உணவுப் பொருளை அந்த விரிசலின் மீது வைத்தது.

பின்னர் அதன்மீது ஏறி மறு பக்கம் சென்றது. மீண்டும் உணவுப் பொருளை இழுத்துச் செல்லத் தொடங்கியது.

“நமக்கு ஏற்படும் துன்பத்தையே பாலமாக வைத்து நாமும் முன்னேற முடியும்” என்று விளக்கினார் குரு.

“துன்பம் குறைந்திட இன்பம் நிலைத்திடும்!
இன்பம் பெருக்கிடத் துன்பம் விளைந்திடும்!” (ஞாக.பா.1253)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 28. அத்துவித ஆசனத்தில் அமர வாரீர்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜப்பானை சேர்ந்தவர் அவர். சிறிய வயதிலேயே அவருக்கு ஜென் தத்துவங்களில் ஈடுபாடு ஏற்பட்டது.

தனக்கு ஏற்ற ஒரு குருவைத் தேடிப் பல இடங்களிலும் அலைந்து திரிந்தார்.

சீனாவிற்கு வந்து சேர்ந்தார்.

அங்கே ஜென் குருக்கள் ஒரே மாதிரியான சிந்தனை கொண்டவர்களாக இருக்கவில்லை.

ஒவ்வொருவரும் ஒருவிதமான பாதையைக் காட்டினார்கள்.

ஒவ்வொருவரின் சிந்தனைகளும், செயல்களும் வேறுபட்டு இருந்தன.

ஒருவர் சரியென்பதை இன்னொருவர் சரியில்லை என்றார்.

ஒருவர் காட்டும் பாதையை இன்னொருவர் மறுத்தார். அதனால் அவருக்கு மிகவும் குழப்பம் ஏற்பட்டது.


யாரிடம் சீடனாகச் சேர்வது? ஒருவரிடம் சேர்ந்தால் மற்றொருவர் சொல்லும் கருத்துக்கு முரண்பாடாக இருக்குமே என்றெல்லாம் யோசித்தார்.

அப்போது ஒரு ஜென் குருவை சந்தித்தார்.

“ஐயா நீங்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்?” என்று கேட்டார்.

“நான் எந்தப் பிரிவையும் சேர்ந்தவன் இல்லை”

“அப்படியா உண்மையாகவா சொல்கிறீர்கள்?”



ஆமாம். “எனக்குத் தெரிந்ததெல்லாம் தியானம் செய்வது, உடலாலும் மனதாலும் புத்தரை உணர்வது, அவ்வளவுதான். மற்றபடி நான் எந்தப் பிரிவிலும் சேராதவன்” என்று அவர் கூறினார்.

அவர் காலில் விழுந்து வணங்கி “என்னைச் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்” என்று கேட்டுக் கொண்டார் அவர்.

“எம்மதத்தும் கடவுள் என்ற குறிப்பு உண்டு,
எண்ணி வணக்கம் செலுத்தும் முறைக ளுண்டு,
நம்மறிவைப் புலன்கள்தமைப் பண் படுத்தி,
நல்வாழ்வைத் தரும்வழிகள் இவைகள் ஆகும்.
இம்முறையில் பண்பட்ட அறிவின் வேகம்,
இறைவனைக் கண்டடைந்து விட மீறும் அப்போ
அம்முறையில், அறிவினிலே ஆதி காணும்
அத்துவித ஆசனத்தில் அமர வாரீர்!” (ஞாக.பா.1849)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 29. மனஒருமைப்பாடு வேண்டும்?

(ஜென்னும் வேதாத்திரியமும்)

தனது தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார் அந்த ஜென் குரு.

அவரின் சீடர் அவரருகே வந்து தயங்கி நின்றார்.

என்னப்பா விஷயம்?”



"ஒரு சந்தேகம் குருவே"

"என்ன சந்தேகம்?"

"நீங்கள் தோட்டத்தில் உலவும் போது எந்த விஷயத்தைப் பற்றிச் சிந்திப்பீர்கள்?"

"சீடனே நான் சிந்தனையைத் தாண்டிய விஷயத்தைப் பற்றிச் சிந்திப்பேன்" புன்னகைத்தபடியே கூறினார் குரு.

"அதை எப்படி குருவே சிந்திக்க முடியும்?" சீடன் புரியாமல் கேட்டான்.

"அது ரொம்ப சுலபம். சிந்தனையை வெட்டி எறிந்துவிடு. அது போதும்" பதிலளித்த குரு மீண்டும் தோட்டத்தில் நடக்கத் தொடங்கினார்.

- தவத்தின் மூலமாக மனதை ஒழுங்குபடுத்திக் கொண்டால், நுண்மைப்படுத்திக் கொண்டால், திடப்படுத்திக் கொண்டால், மனத்திண்மை (வில் பவர்) என்ற சொல்லக் கூடிய ஒரு ஆற்றலைப் பெற்றுக் கொண்டால், இவ்வுணர்வுகளைக் கொண்டு சிந்தனை செய்யச் செய்ய நமக்குள்ளாக உள்ள குறைபாடுகளை உணர்ந்து கொள்ள முடியும். (வேதாத்திரியம்)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 30.ஆசையும் கவலையும்

.(ஜென்னும் வேதாத்திரியமும்)

அவர் ஒரு புகழ்பெற்ற ஜென் துறவி.

அவரைப் பார்ப்பதற்காக பல நாடுகளிலிருந்தும் அரசர்கள், அமைச்சர்கள், தளபதிகள் என்று பலரும் வந்து செல்வது வழக்கம்.

ஒருநாள் அரசர் ஒருவர் அவரைத் தரிசிக்க வந்தார்.

ஒரு தட்டு நிறையத் தங்க நாணயங்களை அவர் முன்பு வைத்து பணிந்து வணங்கினார்.

துறவி அந்தத் தங்க நாணயங்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. “இதெல்லாம் எனக்கு எதற்குத் திரும்பக் கொண்டு போய் விடு” என்றார்.

அரசர். “பரவாயில்லை நான் எனது அன்புப் பரிசாகத் தானே கொடுக்கிறேன். தயவு செய்து இதை மறுக்காதீர்கள்” என்றார்.

“நான் இது போன்ற ஆசைகளையெல்லாம் எப்போதோ முற்றிலுமாக விட்டொழித்து விட்டேன். இது எனக்கு எந்த விதமான சந்தோஷத்தையும் தரப்போவதில்லை. எனவே இதை உடனடியாக வெளியில் அனுப்பிவிடு”

“சரி. நான் உங்களை வற்புறுத்த விரும்பவில்லை. நான் போகும்போது இதை எடுத்துச் சென்று விடுகிறேன்.”

இதை இப்போதே எடுத்துச் சென்றுவிடு. அதன் பிறகு நாம பேசலாம்” என்றார் குரு.

குரு அவசரப்படுவதன் காரணம் புரியவில்லை அரசருக்கு.

காரணத்தை அறிந்து கொள்வதற்காக குருவிடம் கேட்டார் அரசர்.

முதலில் தயங்கிய குரு பின்னர் மெதுவான குரலில், “நான் ஆசைகளை விட்டொழித்து விட்டேன். ஆனால் என் மனைவி அப்படியில்லை. அவள் இத்தனை தங்க நாணயங்களைப் பார்த்தால்

சபலப்பட்டு விடுவாளோ என்ற கவலையில்தான் வெளியில் எடுத்துச் செல்லுமாறு கூறினேன் என்றார்.

உள்ளேயிருந்து அவரின் மனைவி, “நீங்கள் பெரிய குருதான், தங்கத்தின்மேல் உள்ள ஆசையைத் துறந்து விட்டீர்கள். ஆனால் அடுத்தவர்களுக்கு அந்த ஆசை இருக்குமோ என்ற கவலையை உங்களால் துறக்க முடியவில்லையே. அப்படியென்றால் நீங்கள் தங்கத்தைப் பெரிய விஷயமாக நினைக்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்” என்று குரல் கொடுத்தாள்.

## ஆசையும் கவலையும் – வேதாத்திரியம்

“.இயற்கையை அறிந்துஒத்து எண்ணுபவர் எண்ணம்
எப்போதும், எவ்விடத்தும், கவலையாய் மாறாது!” (ஞாக.பா.1566)

“இச்சை என்பது இயற்கை எழுச்சியே
- - - - - - - - - - -
இச்சை நுகர்ந்திட பின் விளை வெண்ணிடு.
இச்சை பிறந்தது போல இறந்திடும்!” (ஞாக.பா.1560)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 31. அன்பு செய்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

தன்னுடைய சீடனுடன் உலாவிக் கொண்டிருந்த ஜென் குரு அங்கிருந்த மலையின் அழகைக் கண்டு வியந்து போனார்.



"இந்த அதிகாலை வேலையில் பார்க்க எவ்வளவு அழகாக இருக்கிறது இந்த மலை" என்று சீடரிடம் தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

அதைக் கேட்ட சீடன், "நீங்கள் புகழ்ந்து கூறும் அளவிற்கு அந்த மலை நமக்கு என்ன கொடுத்திருக்கிறது?" என்று கேட்டான்.

"மலை அழகாக இருப்பதால் எனக்கு மனதில் அன்பு தோன்றியதே தவிர நேசிப்பதற்கு எந்தவிதமான காரணமும் தேவையில்லை" என்று கூறினார் குரு.

### அன்பின் செயல் – வேதாத்திரியம்

"அனைத்துயிரும் ஒன்றென்று
அறிந்த அடிப்படையில்
ஆற்றும் கடமையெல்லாம்
அன்பின் செயலாகும்." (ஞாக.பா.584)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 32. ஆர்வமும் முயற்சியும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

துறவி ஒருவர் ஆற்றில் மூழ்கி தவம் செய்து கொண்டிருந்தார்.

ஒரு இளைஞன் குறுக்கிட்டு "ஐயா நான் தங்களின் சீடனாக சேர விரும்புகிறேன்" என்றான்.

ஆற்றிலிருந்து எழுந்தவர், "ஏன்?" என்றார் துறவி.
"நான் கடவுளை அறிய விரும்புகிறேன்" என்றான்.

சட்டென்று துறவி அவன் கழுத்தின் பின்புறத்தைப் பிடித்து இழுத்து, அவன் தலையை ஆற்றினுள் முக்கினார்.

சிறிது நேரத்தில் மூச்சிறைத்த இளைஞன், திமுறிக் கொண்டு வெளியே வரத் துடித்தான்.

கடைசியாக துறவி அவனைப் பிடித்து வெளியே இழுத்தார்.

வெளியில் வந்த இளைஞன் இருமிக் கொண்டு பெரு மூச்செறிந்தான்.

துறவி கேட்டார், நீ நீரினுள் மூழ்கி இருக்கும் போது உனக்கு என்ன தேவைப் பட்டது?" என்றார்.

"காற்று" என்றான் இளைஞன்.

"நல்லது, வீட்டுக்குச் செல். காற்று போல கடவுள் உனக்கு எப்போது தேவையோ அப்போது திரும்பி வா" என்று சொல்லி விட்டார்.

"தொல்லை படும் அன்பர்களே! சுருங்கச் சொல்வேன்!
சுய நிலையை அறிய கருதவமே போதும்!" (ஞாக.பா.1445)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 33. அலைதான் மனம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

இரண்டு துறவிகள் காற்றில் கொடி அசைவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



"கொடி அசைகிறது," என்றார் ஒரு துறவி.
"இல்லை, காற்றுதான் அசை கிறது," என்றார் மற்றொரு துறவி.
அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த ஜென் குரு ஒருவர், அவர்களிடம், "காற்றும் அசையவில்லை, கொடியும் அசையவில்லை; உங்கள் மனம்தான் அசைந்து கொண்டிருக்கிறது," என்றார்.

### சீவகாந்த அலைதான் மனம் – வேதாத்திரியம்

- மனம் ஒரு நிரந்தரமான பொருள் இல்லை. உயிரிலிருந்து தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் அலை இயக்கம்தான் மனம். (வேதாத்திரியம்)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 34. மன்னிக்க தெரிந்த உள்ளம் மாணிக்க கோயில்
(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஜென் குரு தன் சீடர்களுக்கு ஒரு கதை சொன்னார்.

இரு நண்பர்கள்...

பாலை மணல் வெளியில் நடந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் இருவருக்கும் ஒரு விஷயம் குறித்து வாதம் ஆரம்பித்தது. அது வாய்ச் சண்டையாக மாறியது. நண்பனின் கன்னத்தில் அறைந்து விட்டான் மற்றொருவன்.

அறை வாங்கியன் கோபிக்கவில்லை. அமைதியாக ஒதுங்கிப் போய் மணலில் அமர்ந்தான்.

விரல்களால் இப்படி எழுதினான்:

“இன்று என் உயிர் நண்பன் என் கன்னத்தில் அறைந்து விட்டான்!”

மற்றவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருவரும் நடையைத் தொடர்ந்தார்கள்.

வழியில் ஒரு பாலைவன ஊற்றைக் கண்டார்கள்.

நடந்ததை மறந்து, அந்த ஊற்றில் வெக்கை தீர குளிக்க ஆரம்பித்தார்கள்.

கன்னத்தில் அறை வாங்கியவன் காலை திடீரென்று யாரோ இழுப்பது போன்ற உணர்வு. ஆஹா.. புதைகுழியில் சிக்கிக் கொண்டான் அவன்.

நண்பன் நிலை கண்டதும், பெரும் பிரயத்தனப்பட்டு காப்பாற்றி கரை ஏற்றினான் அவனை அறைந்தவன்.

உயிர் பிழைத்த நண்பன் ஊற்றை விட்டு வெளியில் வந்ததும், அருகில் இருந்த ஒரு கல்லின் மீது அமர்ந்தான். ஒரு கல்லை எடுத்து தட்டித் தட்டி எழுத ஆரம்பித்தான்.

“இன்று என் உயிர் நண்பன் என் உயிரைக் காப்பாற்றினான்”

இதையெல்லாம் பார்த்த மற்றவன் கேட்டான்..

“நான் உன்னை அறைந்தபோது, மணலில் எழுதினாய். இப்போது காப்பாற்றியிருக்கிறேன். கல்லில் எழுதுகிறார். ஏனிப்படி? இதற்கு என்ன அர்த்தம் நண்பா?”

நண்பனின் பதில்...

“யாராவது நம்மை காயப்படுத்தினால், அதை மணலில் எழுதிவிடு. மன்னிப்பு எனும் காற்று அதை அழித்துவிட்டுப் போய்விடும். ஆனால் யாராவது நல்லது செய்தால் அதை கல்லில் எழுது... காலத்தைத் தாண்டி அது நிலைத்திருக்க வேண்டும்!”

- இருப்பு கட்டிய சினமே வஞ்சமாக மாறியது. யார் நமது தேவைகளைத் தடை செய்தாரோ. சினம் கொண்டாரோ, அவரை மன்னித்து விடுவதே சிறப்பு. இதனால் மன்னிப்பு வஞ்சத்தைப் போக்குகிறது.
- பிறர் அறியாமையை மன்னிப்பதும் தனது அறியாமையை அகற்றுவதும் அறிவுடைமை. (வேதாத்திரியம்)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 35. கடவுள் இரகசியம்

(ஜென்னும் வேதாத்திரியமும்

அந்த ஜென் குரு அவ்வப்போது தனது மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் மிகவும் சுருக்கமாக, எளிய முறையில் பதில் சொல்வது வழக்கம்.



அவ்வப்போது சீடர்கள் கேள்விகள் கேட்பதும் அவர் பதில் சொல்வதும் தொடரும்.

சீடர்களில், ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஏதாவது சந்தேகம் தோன்றிக் கொண்டே இருக்கும். அதை அவர் தீர்ந்து வைப்பார்.

ஒரு சீடர், "குருவே புத்தர் ஏன் கடவுளைப் பற்றி எதுவும் பேசவில்லை" என்று கேட்டார்.

"கடவுள்ளனப் படுபவனே மனித னானான்!
கருத்தியங்கிக் கருத்துயர்ந்து கருத்தறிந்தான்!
கடவுளாய் அனைத்தையுமே கண்டு விட்டான்!
காண்பவனே ஆதியந்த மாகி நின்றான்!
கடவுள்நிலை யறிந்தவனே, அறியா தோர்க்குக்
கருத்துணர்த்தும் நூல்கள்பல எழுதி வைத்தான்!
கடவுள் இரகசியம் அதனை வெளியாய்க் காட்டும்
கடமையே சிறந்ததெனக் கண்டான் ஞானி!" (ஞாக.பா.1119)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 36. ஒவ்வொரு நாளும் இன்பம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவியிடம் வந்த பணக்காரர் ஒருவர்.



"எனக்கு பொழுது போவதே சிரமமாக உள்ளது. அதை எப்படியாவது சரிசெய்து தாருங்கள்" என்று கேட்டார்.

"இந்த நாள் மீண்டும் வராது, அது இரத்தின் கல்லைப் போல் மதிப்பு வாய்ந்தது. இந்த நாளின் ஒவ்வொரு நிமிடமும் விலை மதிப்பில்லாதது, எவ்போதும் இப்போதே வாழ்" என்று கூறி அனுப்பினார் துறவி.

ஒவ்வொரு நிமிடமும் இன்பம் இன்பம் – வேதாத்திரியம்

"இன்ப ஊற்று என நிறைந்த இறைவா – வேதாத்திரியம்

"பிறவியின் நோக்கத்தை அறிந்த போதும்,
பின்அந்த எல்லையினை அடைவதற்கு
அறநெறியில் விழிப்போடு பொறுப் புணர்ந்து,
ஆற்றி மனம் செயல் தூய்மை ஆனபோதும்,
உறவுகளில் உண்மைநிலை உணர்ந்து ஆற்றி,
உயர்வான துறவுநிலை உணர்ந்த போதும்,
துறவுநிலை முடிவாகப் பெற்ற போதம்,
துய்த்த பேரின்பம் எவ்வாறுரைப்பேன்!" (ஞாக.பா.1849)

“இன்ப ஊற்று என நிறைந்த இறைவா” எனும் போதிலே
ஏற்படும்ஓர் இன்பமதை எவ்வாறு சொல்லுவேன்?” (ஞாக.பா.1652)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3

## Youtube links.

1. ஞானத்தை தேடி https://youtu.be/P-iIm0PbDkc
2. உளமார்ந்த மன்னிப்பு https://youtu.be/VMOulJ9sksw
3. செயலுக்கு விளைவு உண்டு? https://youtu.be/VMOulJ9sksw
4. பிறந்தவர்கள் அனைவருமே இறப்பார் https://youtu.be/FeuTsz_UHVk
5. எதற்கும் கவலை வேண்டாம் https://youtu.be/bKLEyjZ9Dhw
6. ஞானத்தின் நிலைகள் https://youtu.be/dH_g9xppc2k
7. எண்ணத்தின் சிறப்பு https://youtu.be/gmwyAl4hQzM
8. முழு விழிப்புணர்ச்சி! https://youtu.be/iF63ygxsM0w
9. நீ நான் இல்லையே! https://youtu.be/Bl1nKYoYalQ
10. மனம் ஒரு பொக்கிஷம் https://youtu.be/xDVSkB0MZFQ
11. உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு
https://youtu.be/hOgDmsJLJv8
12. நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
https://youtu.be/3nUvTOaY6sU
13. மௌனம் எனும் ஞானவரம்பு https://youtu.be/FNblbWBQB0U
14. கருதவமே போதும் https://youtu.be/Be67Qv6wIP4
15. சொர்க்கமா? நரகமா? https://youtu.be/ZCsGijQO5iI
16. சித்தம் என்னும் பெருநிதி https://youtu.be/5vAXpI2RKF0
17. மனப்பதிவே இயக்கம் https://youtu.be/eYPcIrMhmok
18. பழக்கமே பற்றாக! https://youtu.be/VU6wLnjWW-g

19. ஞானமும் வாழைப்பழமும் https://youtu.be/6rO5d0qk3po

20. எந்த எண்ணமும் நம்மை தூக்கிப் போகாது?
https://youtu.be/6fErfSJF0nc
21. மனத்திண்மை வேண்டும் https://youtu.be/a7hRhNdL6B8
22. மனித மனம் நிறைவு பெற https://youtu.be/JH70aN0QLhE
23. புலன் கடந்த செயல் முடிவே https://youtu.be/VAWGoRrCVkQ
24. கடவுள் எங்கே? என்று பலர் தேடுகின்றார்.
https://youtu.be/qLDMy3KaZWs
25. எண்ணத்தின் வலிமை https://youtu.be/mKO7FcRlr7w
26. மனத்தூய்மை வேண்டும் https://youtu.be/-VPYLDqtq7s
27. ஒவ்வொரு நிமிடமும் இன்பம் https://youtu.be/nuNHhW27O1Q
28. அத்துவித ஆசனத்தில் அமர வாரீர் https://youtu.be/64vZ8HnOXO0
29. மனஒருமைப்பாடு வேண்டும்?
30. ஆசையும் கவலையும் https://youtu.be/CxgyLb8MKv0
31. அன்பு செய் https://youtu.be/aJ0rI25h-Wg
32. ஆர்வமும் முயற்சியும் https://youtu.be/s39cRNPKcv8
33. அலைதான் மனம் https://youtu.be/SnYGGK0xSRw
34. மன்னிக்க தெரிந்த உள்ளம் மாணிக்க கோயில்
https://youtu.be/ilNnrcxqQiI
35. கடவுள் இரகசியம் https://youtu.be/SUcct5fvOZ0
36. ஒவ்வொரு நாளும் இன்பம் https://youtu.be/WCRsAA3UtYE

## துணைநின்ற நூல்கள்


1. ஜென் கதைகள், இணையதளம்
2. ஞானக்களஞ்சியம் பாகம் 1 & 2, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
4. மாக்கோலமாய் விளைந்த மதி விருந்து, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு

5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, பாகம்1.2.3. விஜயா பதிப்பகம், கோவை.
6. ஞானம் தரும் ஜென் கதைகள், அம்பிகா சிவம், கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
7. ஜென் கதைகள், ஏ.சோதி, நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி
8. ஜென் கதைகள், உதயதீபன், மீனாட்சி பதிப்பகம், சென்னை
9. உலக சமாதானம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
10. Zen Stick – karn Rahul - Kindly Store
11. Tanya"s Collection Of Zen Stories – Schmid Tanya

# ஆசிரியரின் பிற நூல்கள்

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?

3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்சிதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?

25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27.தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு

2. தவம்

## ஆராய்ச்சி

1. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# vethathiriam banukumar (Youtube channel)

## 2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 106 தலைப்புகளில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து

22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை

57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்கோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை

92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
108.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்